## பாதசாரிகள் பாதையில் சட்டவிரோத பார்க்கிங்

# 14 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்



கோலாலம்பூர், ஜூலை 27- பாதசாரிகள் பாதையில் பெரும் இடையூறை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிள்கள் சட்டவிரோதமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததற்கு எதிராக டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டது.

பிரிக்பீல்ட்ஸ் ஜாலான் செண்ட்ரல் 3இல் இந்தச் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கூரை அமைக்கப்பட்டிருந்த பாதசாரிகள் பாதையில் நடந்து செல்வோருக்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 மோட்டார் சைக்கிள்கள், 4 வாகனங்களை டிபிகேஎல் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அதேசமயத்தில் பல்வேறு குற்றங்களுக்காக 33 கம்பாவுன்ட் நோட்டீசுகளையும் அவர்கள் வெளியிட்டனர்.